# கேள்விப்பத்திர அறிவித்தல்
# P-044/2025 - வளிச்சீராக்கி இயந்திரங்கள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் பராமரித்தல் என்பவை தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதான நிறுவன உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது. கேள்வி பற்றிய விபரம் பின்வருமாறு அமைகிறது.

| No. | Capacity of the Air Conditioner | No. of Units |
|---|---|---|
| 1 | 11,000 BTU – 13,000 BTU Inverter Cassette Type | 15 |
| 2 | 17,000 BTU - 19,000 BTU Inverter Cassette Type | 10 |
| 3 | 22,500 BTU - 25,500 BTU Inverter Cassette Type | 20 |
| 4 | 34,000 BTU - 41,500 BTU Inverter Cassette Type | 35 |
| 5 | 42,000 BTU - 51,500 BTU Inverter Cassette Type | 20 |
| **Total** | | **100** |

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை **2025.01.08ஆம் திகதி முதல் 2025.01.29ஆம் திகதி வரை** வங்கி வேலை நாட்களில் **முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை** இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக ஒரு கேள்விப்பத்திர விண்ணப்பத்திற்காக ரூ.5,000/- மீளச் செலுத்தப்படாத கட்டணத்துடன் குறித்த நிறுவனத்தின் விண்ணப்ப கடிதத்தையும் மக்கள் வங்கி வழங்கல் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஒழுங்காகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரத்துடன் கேள்விப்பத்திரத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 3% பெறுமதியினைக் கொண்ட விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியொன்றை ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டியதோடு, அது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 180 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருக்க வேண்டும். இதற்காக 180 நாட்களுக்குச் செல்லுபடியான வங்கி கொடுப்பனவு கட்டளையொன்றை அல்லது வங்கி வரைவை சமர்ப்பிக்க முடியும். தனிப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மக்கள் வங்கியின் எந்தவொரு விதத்திலான கணக்கொன்றில் பண வடிவில் உள்ள வைப்புத் தொகை மற்றும் அதற்கு உரியதாக எதிரீடு செய்யும் கடிதமாக இருந்தாலும் பிணைப்பொறுப்பு முறியாக ஏற்றுக்கொள்ள முடியும்.

3. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திங்களை மக்கள் வங்கி, வழங்கல் திணைக்களம், இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இட வேண்டும். இன்றேல் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். 2025.01.29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விப்பத்திரம் மூடப்படுவதோடு, அன்றைய தினம் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படாமலே மீள ஒப்படைக்கப்படும்.

4. அனைத்து அல்லது எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் மற்றும் எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரமொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு. ஆகக் குறைந்த விலையை ஏற்றுக்கொள்ளுவதற்கு வங்கி கட்டுப்பட்டிருக்கவில்லை.

5. இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதம முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.


**பிரதம முகாமையாளர் (வழங்கல்)**
**மக்கள் வங்கி**
**வழங்கல் திணைக்களம்,**
**30/101, கியு வீதி, கொழும்பு 02.**

**தொலைபேசி இலக்கம் : 2439577/8, 2307326**
**தொலைநகல் : 2439576**
**மின்னஞ்சல் : supplies@peoplesbank.lk**